

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கத்தில், பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் மாற்றுத்திறனாளிகளுக்கான பேட்மிண்டன் விளையாட்டில் வெள்ளிப் பதக்கம் வென்ற செல்வி. துளசிமதியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொன்னாடை போர்த்தி, பூச்செண்டு வழங்கி கௌரவித்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட விளையாட்டு அலுவலர் கோ.சாந்தி ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலுள்ள விளையாட்டு மைதானத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், நடைபெறும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை 2025 விளையாட்டுப் போட்டிகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கொடி அசைத்து துவக்கி வைத்தார் உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் ரங்கராஜன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைநர் நலன் அலுவலர் முனைவர். சேதுராமன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரவிசந்திரன், நகராட்சி ஆணையாளர் திருநாவுக்கரசு, உடற்கல்விபயிற்றுநர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவ/மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இயற்கை பேரிடருக்குக் கூட நிதி ஒதுக்காத கல் நெஞ்சினராக இருக்கும்

# மோடி அரசு தமிழக கல்வித்துறையையும் சீரழிக்க முயல்கிறது!

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, செப். 12 -

இயற்கைப் பேரிடருக்குக் கூட நிதி ஒதுக்காத கல் நெஞ்சினராக இருக்கும் மோடி அரசு தமிழக கல்வித்துறையையும் சீரழிக்க முயல்கிறது என ‘தீக்கதிர்’ மந்திரி பிரதான் எதை பிரதானப்படுத்த துடிக்கிறார், எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.



தீக்கதிர்
2024 செப்.11 புதன்கிழமை
மந்திரி பிரதான் எதை பிரதானப்படுத்த துடிக்கிறார்?
மோடி அரசின் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததால்தான் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கவில்லை என ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.
சமக்ர சிக்சா அபியான் எனப்படும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு இந்தாண்டு வழங்கப்பட்டிருக்க வேண்டிய ரூ.573 கோடியை வழங்க மறுத்து மோடி அரசு முடக்கி

அது வருமாறு:

மோடி அரசின் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததால்தான் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கவில்லை என ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

சமக்ர சிக்சா அபியான் எனப்படும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு இந்தாண்டு வழங்கப்பட்டிருக்க வேண்டிய ரூ.573 கோடியை வழங்க மறுத்து மோடி அரசு முடக்கி வைத்துள்ளது.

இந்த தொகையை வழங்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். இதற்கு பதிலளித்துள்ள தர்மேந்திர பிரதான் பி.எம்.ஸ்ரீ திட்டத்தை ஏற்க வேண்டும் என கூறியிருந்தார்.

இதன் பொருள் மும்மொழிக் கொள்கை உள்ளிட்ட ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையை ஏற்றால்தான் ஒன்றிய அரசு நிதி தரும் என்பதுதான்.

கல்வித்துறையில் கேரளம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் சிறந்து விளங்குகின்றன. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களை விட அனைத்து துறையிலும் சிறந்து விளங்கும் கேரளம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே பி.எம். ஸ்ரீ திட்டத்தை ஏற்கவில்லையென்றால் நிதி தர முடியாது என அடாவடி செய்வதும்ஆகும்.

தாய்மொழிக் கல்விக்காகவே புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்திருப்பதாக ஒன்றிய அமைச்சர் கூறுவது அப்பட்டமான பம்மாத்து வேலையாகும்.

புதிய கல்விக் கொள்கையை ஊன்றிப் படித்தால் சமஸ்கிருத மொழியை முன்னி றுத்துவதே அவர்களது நோக்கமாக உள்ளதை புரிந்து கொள்ள முடியும். இந்தி மொழி திணிப்புக் கூட ஒரு இடைக்கால ஏற்பாடே என தெளிவாகக் கூறுகின்றன.

இந்த லட்சணத்தில் புதிய கல்விக் கொள்கை சமத்துவம் மற்றும் வருங்காலச் சிந்தனை கொண் டது என்று ஒன்றிய கல்வியமைச்சர் அளந்து விடுகிறார். குலக்கல்வியையும், ஒரு வகையான குருகுலக் கல்வியையும் கொண்டு வர முயல்கி றது ஒன்றிய அரசு. தேர்வு என்ற பெயரில் மாணவர்களை அச்சுறுத்தி கல்விக் கூடங்களை விட்டு விரட்டும் கொள்கைக்கே அவர்கள் கல்விக் கொள்கை என பெயர் வைத்துள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மதவெறி கொள் கைகளை திணிக்கவும், கல்வித்துறையை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு முற்றாகத் திறந்து விடவும் வழிவகுப்பதே மோடி அரசின் கல்விக் கொள்கை. இதனை தமிழ்நாடு அரசு எதிர்ப்பது நூறு சதவீதம் நியாயமானது. இதைக்காரணம் காட்டி நிதி தர மாட்டோம் என மிரட்டுவது கூட்டாட்சிக் கொள்கைக்கும், அரசியல் சட்ட நெறி முறைகளுக்கும் முற்றிலும் எதிரானதாகும்.

இயற்கைப் பேரிடருக்குக் கூட நிதி ஒதுக்காத கல் நெஞ்சினராக இருக்கும் மோடி அரசு தமிழக கல்வித்துறையையும் சீரழிக்க முயல்கிறது. தமிழ்நாடு அரசு கேட்பது பாஜகவின் பணமல்ல, தமிழ்நாட்டு மக்கள் உள்பட ஒட்டு மொத்த இந்திய மக்களும் செலுத்தியுள்ள வரிப் பணத்தில் தன்னு டைய பங்கையே தமிழ்நாடு கேட்கிறது. இதை மறுக்க ஒன்றிய அரசுக்கு எந்த உரிமையும் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் தெரிவித்துள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டக் கழக

# மகளிர் தொண்டரணி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

சென்னை, செப்.12-

சென்னை கிழக்கு மாவட்டம் மகளிர் தொண்டரணியின் பொது உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டம் திராவிட முன்னேற்ற கழக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் பெருநகர சென்னை வளர்ச்சி குழும ஆணைய தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்களின் ஆலோசனைப்படி சென்னை கிழக்கு மாவட்டம் மகளிர் தொண்டர் அணி பொது உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டம் இராட்லர் தெருவில் உள்ள எஸ்.ஆர். திருமண மண்டபத்தில் மாவட்ட மகளிர் தொண்டர் அணியின் அமைப்பாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி 58வது வார்டு மாமன்ற உறுப்பினருமான இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த பொது உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் பெருநகர சென்னை வளர்ச்சி குழும ஆணைய தலைவருமான பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு கழக முப்பெரும் விழாவில் மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பில் முப்பெரும் விழா கொண்டாடுதல் புதிய மகளிர் தொண்டரணிக்கு உறுப்பினர்கள் சேர்த்தல்,

மேலும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் கழக அரசின் பொற்கால ஆட்சி தொடர வரவிருக்கும் 2026 சட்டமன்ற பொது தேர்தலுக்காக அயராது உழைத்து மீண்டும் ஆட்சியை பொறுப்பேற்று செய்திட சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டரணியினர் அயராது உழைத்திட வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்வில் மாநில மகளிர் அணியின் சமூக வலைதள பிரிவின் பொறுப்பாளர் டாக்டர் யாழினி கலந்து கொண்டு கழக ஆக்க பணிகள் மற்றும் புதிய உறுப்பினர் சேர்க்கைகள், கழக அரசின் மகளிர் நலன் சார்ந்த திட்டங்கள் எடுத்துரைத்து மகளிர்களை பெருமளவு கழக உடன்பிறப்புகளாக மாற்ற வேண்டும் என்று சிறப்புரை ஆற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் சென்னை மேயர் பிரியா ராஜன், மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், பொதுக்குழு உறுப்பினர்கள் சாவித்திரி வீரராகவன், கலைச்செல்வி, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, வட்ட செயலாளர் பாபு உள்ளிட்ட மாவட்ட மகளிர் தொண்டர் அணி மாவட்டத் தலைவர்கள், துணை தலைவர்கள், வலைதள பொறுப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் அறும் சுவை உணவு பரிமாறப்பட்டது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றிய பேரூர், திமுக சார்பில் திமுக முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்த பொது உறுப்பினர்கள் கூட்டம் உத்திரமேரூர் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் வரவேற்பில் நடைபெற்றது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர். சுப்பராயன், ரமேஷ் , ருத்ர கோட்டி, சுகுணா சுந்தர்ராஜன், கெங்கன், பாபு, குமார், தேவ், கார்த்திகேயன், மாயகிருஷ்ணன், வீரமணி மகேந்திரன் ஜெயகாந்த அப்துல்அக்கீம், கோவிந்தராஜ், குணசேகரன், கருணாநிதி, ராஜேந்திரன், செல்லமுத்து, ராஜபாண்டியன் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னணியனிர் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.முரளி பங்கேற்பு

# 126 -வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் கோ.கண்ணன் அறிவிப்பு

சென்னை, செப். 12 -

சென்னை, தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 126வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (12-9-2024 வியாழக் கிழமை) மாலை 6.00 மணிக்கு மேல் லாசரஸ் சர்ச் ரோடு பின்புறம் கண்ணாடி மாளிகை திருமண மண்டபத்தில் வட்டச் செயலாளர் கோ.கண்ணன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர் முன்னிலை வகிக்க, மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதி,

பகுதி நிதிகள், செயற்குழு உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் கள், கழக பாக உறுப்பினர் கள், மற்றும் பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு அழைக்கின்றேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் கோ.கண்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை க. வீரைய்யா

### செப்டம்பர் 12 (1993)



**புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### எம்.மதிவாணன் முன்னிலையில் - வேளச்சேரி கிழக்கு

# 173-வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## துரைகபிலன் பங்கேற்பு! மு.தனசேகரன் வேண்டுகோள்

சென்னை, செப். 12 -

வேளச்சேரி கிழக்குப் பகுதி 173-வது பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (12.9.2024) காலை 9 மணிக்கு வட்டக் கழக அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் எம்.மதிவாணன் தலைமையில் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் மு. தனசேகரன் முன்னிலையில் பகுதி கழக செயலாளர் துரை கபிலன் பங்கேற்று கலந்து கொண்டு முப்பெரும் விழா கழகத்தின் பவள விழா பகுதி கழக செயல் வீரர் கூட்டம் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.

எனவே கழக நிர்வாகிகள் சார்பு மன்ற நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, வட்டக் கழக நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்ட கழக செயலாளர் மு.தனசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார் .

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரை!

# துறைமுகம் கிழக்கு 55 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எல்.சத்தியநாராயணன் அறிக்கை!

சென்னை, செப். 12

துறைமுகம் கிழக்குப் பகுதி, 55 வது வட்டச் செயலாளர் எல்.சத்தியநாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்குப் பகுதி, 55 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (12.9.2024 வியாழக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, சமுதாய நலக் கூடம், செயின்ட் சேவியர் தெரு, ஏழு கிணறில் நடைபெறுகிறது.

எனது (வட்டச் செயலாளர் எல்.சத்தியநாராயணன்) தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் எஸ்.இராஜசேகர் முன்னிலை வகிக்கிறார்.

எஸ்.சந்தியாகு, பி.விஜயகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர். இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கின்றனர்.

எனவே வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

சி.பிரகாஷ் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் கழகச் செயல்வீரர்கள், நிர்வாகிகள், முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எல்.சத்தியநாராயணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்

### செப்டம்பர் 12 (2019)



**வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவர்.**

**ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**